Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 657/2024

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.1 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | வழக்கறிஞர் |
| பெயர். | - | செந்தில்குமார் | வட்டம் | - | திருக்கோவிலூர் |
| த/பெ. | | செல்வராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | ஜோதிமங்கலம் | வயது | - | 44 |

21.01.2026

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை.

1. நான் தற்போது ஜோதிமங்கலம் கிராமத்தில் வசித்து திருக்கோவிலூர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன தேன்மொழி எனது தாயார். கடந்த 19.02.2024 ந் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் வங்கி வேலைக்காக எனது தாயாரும், எனது தந்தை செல்வராஜும் 5169 என்ற டி.வி.எஸ் இருசக்கர வாகனத்தில் வீட்டிலிருந்து திருக்கோவிலூருக்கு சென்று கொண்டிருந்தார்கள்.

2. மணம்பூண்டி பம்பாய் மெக்கானிக் ஷெட் என்ற இடத்தில் எனது தாய், தந்தை சென்று கொண்டிருந்த போது அவருக்கு பின்னால் வந்த ருக்மணி என்ற தனியார் பேருந்து என் தந்தை ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. மேற்படி விபத்தில் எனது தாயார் பேருந்தின் ெஉறட்லைட் தலையில் பட்டு காயம் ஏற்பட்டிருந்தது, எனது தந்தைக்கு கை, கால் ஆகிய இடங்களில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. மேற்படி விபத்தை குறித்து எனது அக்கா பத்மபிரியா எனக்கு தகவல் தெரிவித்தார். நான் உடனே சம்பவ இடத்திற்கு போனேன். அதற்குள் அங்கு இருந்தவர்கள் காயமடைந்த எனது தாய்,

தந்தையை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றுள்ளதாக கூறினார்கள்.

3. நான் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது எனது தந்தைக்கு ஏற்பட்ட காயத்திற்கு அவருக்கு வெளிநோயாளியாக சிகிச்சை அளித்தார்கள். எனது தாயாரை அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு எனது தாயாருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சையில்இருந்தவர் சிகிச்சை பலனின்றி மாலை 06.00 மணியளவில் இறந்துவிட்டார்.

4. பின்பு விபத்து குறித்து அரகண்டநல்லூர்காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும்**. பின்பு போலீசார் பிரேத விசாரணை செய்து எனது தாயார் பிரேதத்தை ஒப்படைத்தார்கள். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டு தான் தெரியும் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு எதிரி காரணம் இல்லை என்றாலும், எனது தந்தை தான் இருசக்கர வாகனத்தை வேகமாக ஓட்டிச்சென்று ஏற்படுத்திக்கொண்டார் என்றால் இல்லை. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 657/2024

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.2 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | ஆசிரியர் (ஓய்வு) |
| பெயர். | - | செல்வராஜ் | வட்டம் | - | திருக்கோவிலூர் |
| த/பெ. | | தனபால் உடையார் | சமயம் | - | |
| கிராமம் | - | அகரம் (எ) குழந்தைமங்கலம் | வயது | - | 88 |

21.01.2026

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது அகரம் (எ) குழந்தைமங்கலம் கிராமத்தில் வசித்து ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். இந்த விபத்தில் இறந்துபோன தேன்மொழி எனது மனைவி. நானும், எனது மனைவியும் ஒரு நாள் இருசக்கர வாகனத்தில் சொந்த வேலையாக குடமுரட்டி அருகே சென்று கொண்டிருந்த போது எங்கள் பின்னால் வந்த ருக்மணி என்ற தனியார் பேருந்து நான் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்தில் எனக்கு கையில் காயம் ஏற்பட்டது. எனது மனைவிக்கு தலையில் காயம் ஏற்பட்டது.

2. பின்பு காயமடைந்த எங்களை திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். எனக்கு சிகிச்சை அளித்து வீட்டிற்கு அனுப்பிவிட்டார்கள். எனது மனைவியை மேல் சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு எனது மனைவி இறந்துவிட்டார். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு ஓட்டுநர் உரிமம் எதுவும் இல்லை என்றால் இருக்கும், ஆனால் எனக்கு நியாபகம் இல்லை. இந்த விபத்திற்கு எதிரி காரணம் இல்லை என்றாலும், நானாக தான் சென்று எதிரிபேருந்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் இல்லை. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 657/2024

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.3 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | வீட்டுக்குடித்தனம் |
| பெயர். | - | பத்மபிரியா | வட்டம் | - | திருக்கோவிலூர் |
| க/பெ. | | செந்தில்குமார் | சமயம் | - | |
| கிராமம் | - | எடையூர் | வயது | - | 48 |

21.01.2026

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது எடையூர் கிராமத்தில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன தேன்மொழி எனது தாயார். கடந்த 19.02.2024 ந் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் எனது அம்மா என்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தான் திருக்கோவிலூர் செல்வதாகவும், மாலை வீட்டிற்கு வருவதாகவும் சொன்னார்.

2.பின்பு சுமார் 10-20 நிமிடம் கழித்து எனது தாயார் செல்லிலிருந்து எனக்கு போன் வந்தது. அதில் பேசிய நபர் எனது தாயாருக்கும், தந்தைக்கும் விபத்து ஏற்பட்டதாக தகவல் தெரிவித்தார். பின்பு அங்கிருந்த முருகன் என்பவர் காயமடைந்த எனது தாய், தந்தையை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருக்கோவிலூருக்கு அனுப்பி வைத்தார். நான் விபத்து குறித்து அ.சா.1-ற்கு தகவல் தெரிவித்தேன்.

3. காமடைந்த எனது தாயாரிடம் செல்போனில் பேசினேன். அப்போது அவர் இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்த போது ருக்மணி என்ற தனியார் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார். பின்பு காயமடைந்த எனது தாயாரை மேல் சிகிச்சைக்காக முண்டியம்பாக்க் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். பின்பு

சிகிச்சையில் இருந்த எனது தாயார் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். பின்பு போலீசார் எனது தாயாரின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்து ஒப்படைத்தார்கள். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டு தான் தெரியும் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு எதிரி காரணம் இல்லை என்றாலும், எனது தந்தை தான் இருசக்கர வாகனத்தை வேகமாக ஓட்டிச்சென்று ஏற்படுத்திக்கொண்டார் என்றால் இல்லை. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.